# பிரார்த்தனைப் பாடல்கள்

தொகுத்தவர்

மு. அருணாசலம்

காந்தி வித்தியாலயம்

திருச்சிற்றம்பலம் - குத்தாலம்

1957

# பிரார்த்தனைப் பாடல்கள்

தொகுத்தவர்

மு. அருணாசலம்

UNIVERSITY EXTENSION LIBRARY
12 DEC 1961
MADURAI

காந்தி வித்தியாலயம்

திருச்சிற்றம்பலம் - குத்தாலம்

1957

மீனாட்சி புத்தக நிலையம்

முதல் பதிப்பு : பொங்கல் தினம்
14-1-1957

உரிமை பதிவு

விலை ரூபா ஒன்றேகால்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14.

# முகவுரை

காந்தி வித்தியாலயத்தில் தினமும் காலை மாலை இருவேளையும், 5-45 மணிக்கு இறை வழிபாடு நடைபெறுகிறது. இது பெரும் பாலும் திறந்த வெளியில் நடைபெறும் கூட்டு வழிபாடு. காந்தி யடிகள் முன்னிலையில் நடைபெற்ற பிரார்த்தனை முறையைத் தழுவியும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் திருவாக்கின்படியும், இது நடைபெறுகிறது.

வித்தியாலயத்தில் பயில்கிற மாணாக்கர் குழந்தைகள் ஆகி யோர் இன்று பாடுகிற பாடல்கள் இத்தொகுப்பில் பெரும் பகுதி. சிறு பகுதி, அவர்கள் இனி அறிய வேண்டும் என்ற எண்ணத் தோடு சேர்க்கப்பெற்றுள்ளது. நினைவிலிருந்து தொகுக்கப்பெற் றமையால் பாடல்கள் விடுபட்டிருக்கும். சில பிற்சேர்க்கையாக (பக்கம் 99) காணலாம்.

இங்கு வழங்குகின்ற மூன்று சம்ஸ்கிருத மந்திரங்களும், குஜ ராத்தி மராத்திப் பாடல் ஒவ்வொன்றும் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டுவாழ்த்தான தாகுரின் வங்காளிப் பாடலும் இதனுள் காணப் பெறும்.

சர்வமத சமத்துவம் என்ற நினைப்பு வேண்டுவது உண்மையே. ஆனால் பிள்ளைகள் நிலையில், தங்கள் சமயத்துக்குரிய அருட் பாசுரங் களில் நிரம்பப் பயிற்சி இல்லாதுபோனால், தமிழனாகப் பிறந்ததன் பயன் இல்லை. ஆதலால் இங்கு சைவ வைஷ்ணவப் பாசுரங்கள் அதிகமாகவே இருக்கும். சமயபக்தியும், தமிழறிவு ஊட்டுவதும், சிறந்த தமிழிலக்கியங்களை அறிமுகப்படுத்துவதும் ஒரு முக்கிய நோக்கம். சில இராக தாளங்கள், முடிவில் சேர்க்கப்பெற்றுள்ளன.

காந்தி வித்தியாலயம்
திருச்சிற்றம்பலம்
14-1-1957

மு. அருணாசலம்

UNIVERSITY LIBRARY ★ MADURAI

# பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| காலை வணக்கப்பாடல்கள் | 5 |
| மாலை வணக்கப்பாடல்கள் | 15 |
| நாமாவளி | 27 |
| தனிப் பாடல்கள் | 28 |
| சம்பந்தர் தேவாரம் | 28 |
| அப்பர் தேவாரம் | 37 |
| சுந்தரர் தேவாரம் | 49 |
| திருவாசகம் | 52 |
| அருணகிரிநாதர் - திருப்புகழ் முதலியன | 56 |
| ஆழ்வார் பாடல்கள் | 65 |
| தாயுமானவர் பாடல் | 73 |
| சிலப்பதிகாரம் முதலியன | 76 |
| இராமலிங்க சுவாமிகள் பாடல் | 79 |
| பிள்ளைத்தமிழ் | 81 |
| மற்றவை | 84 |
| பாரதியார் பாடல் | 89 |
| கொடிவணக்கப் பாடல்கள் | 94 |
| முஸ்லிம் பாடல் | 95 |
| வடமொழிப் பாடல்கள் முதலியன | 96 |
| நாட்டு வாழ்த்து | 98 |
| பிற்சேர்க்கை | 99 |
| ஆசிரியர் பெயர், நூற்பெயர் | 103 |
| ராக தாளக் குறிப்பு | 105 |
| பாட்டு முதற்குறிப்பு | 109 |

UNIVERSITY EXTENSION
MADURAI

# பிரார்த்தனைப் பாடல்கள்

## காலை வணக்கப் பாடல்கள்

### 1

1. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே.

—இராமலிங்க சுவாமிகள்

2. ஆற்றல்கள் அனைத்தும் நீயே
அருளுவாய் எனக்கும் ஆற்றல்
போற்றிடும் வீரியம் நீ
எனக்கதைப் புகட்ட வேண்டும்
மாற்றரும் பலங்கள் நீயே
மற்றெனைப் பலவா னாக்கு
சாற்றரும் ஜீவ சத்தே
சத்தினை எனக்கும் தாராய். (1)

தீமையை வெறுத்து நீக்கித்
தீரமாய்த் திகழ்வாய் நீயே
வாய்மையில் எனக்கும் அந்த
வலிமையை வழங்க வேண்டும்

தாய்மையின் சகிப்பு நீயே
தந்தருள் சகிப்புத் தன்மை
தூய்மைசேர் ஒழுக்க வாழ்வில்
துலங்கிடும் ஆன்ம ஜோதி. (2)

உடலினும் உயிருக் கப்பால்
உயர்ந்தொளிர் ஆன்ம சக்தி
கடலிலும் பெரிதாம் உன்றன்
கருணையில் மூழ்கச் செய்வாய்
அடைவரும் அமைதி தந்து
அன்பெனும் அமுத மூட்டி
மடமைகள் யாவும் மாற்றி
மங்கலம் அருள்வாய் போற்றி. (3)

—ருக்வேத மந்திரம்

## 2

3. கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும்' வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ?

—திருவாசகம்

4. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (1)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்,
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள் ;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள் ;
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள். (2)

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்,
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம் ;
உய்வமென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக்குயி ராகிய தெய்வம் ;
செய்வம் என்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். (3)

—பாரதியார்

## 3

5. பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
விழி துயில் கின்றனை இன்னுமெந் தாயே
வியப்பிது காண்பள்ளி எழுந்தருளாயே.

—பாரதியார்

6. முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா

வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவேலுடனே வளர்வாய்! அடியார்
புது வாழ்வுறவே புவிமீ தருள்வாய் (முருகா)

சுருதிப் பொருளே, வருக!
துணிவே, கனலே, வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
சமரா திபனே சரணம் சரணம் (முருகா)

—பாரதியார்

## 4

7. உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

—கம்பர்

பல்லவி

8. சகல வல்லமையுள்ள தெய்வமொன் றிருக்கையில்
சஞ்சல மேன் மனமே.

அனுபல்லவி

அகில புவனமெல்லாம் ஆளுகையால் கொண்ட
ஆண்டவனொருவனே
தாண்டவ மாடிடும் (சகல)

சரணம்

ஆதி அந்தம் அற்ற பொருள்தனைத் தேடு
அவனியில் யாவற்றையும் நீ தள்ளிப்போடு
நீதியாகிய நல்வழி நாடு
நித்யா னந்தமுள்ள வஸ்துவைக் கூடு(சகல)

## 5

9\. திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித் தலான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேருவலந் திரிதலான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற் கவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான். —சிலப்பதிகாரம்

10\. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூமம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே ! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர் ! அவளை எழுப்பீரோ ? உம்மகள்தான்
ஊமையோ ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

—ஆண்டாள்

## 6

11. பரிதியின் பேரொளி வானிடைக் கண்டோம் :
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்
கருதிநின் சேவடி அணிவதற்கு என்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம் ;
சுருதிகள் பயந்தனை ; சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை, அம்மே !
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய் !
நிர்மலையே ! பள்ளி எழுந்தருளாயே !

—பாரதியார்

12. நாராய ணாய நமவென்று விண்ணோடு
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணாகர மூர்த்திக்கு
ஆரா தனைஎன் அறியாமை ஒன்றுமே. —கம்பர்

## 7

13. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

—அருணகிரிநாதர்

14. கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூர் ஈசனை
எல்லியும் பகலும் இசை வானவா
சொல்லி டீர்நும் துயரங்கள் தீரவே.

15. தாயத்தார் தமர் நல்நிதி என்னும்இம்
மாயத்தே கிடந் திட்டு மயங்கிடேல்
காயத்தே உளன் கானூர் முளையினை
வாயத்தால் வணங்கீர் வினை மாயவே. —அப்பர்

## 8

16. நாழி நவைதீர் உலகெலாம் ஆக
நளினத்து நீதந்த நான்முக னார்தாமே
ஊழி பலபலவும் நின்றளப்பில் ஒன்றும்
உலவாப் பெருங்குணத்து உத்தமனே மேல்நாள்
தாழி தரையாக தண்தயிர் நீராக
தடவரையே மத்தாகத் தாமரைக் கைநோவ
ஆழி கடைந்தமுதம் எங்களுக்கே ஈந்தாய்
அவுணர்கள் தாம்நின்னடிமை ஆகாமை உண்டே.

—கம்பர்

17. இரவுபகல் பலகாலும்
இயலிசை முத்தமிழ்கூறி
திரமதனைத் தெளிவாகத்
திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே
பரசிவதத் துவஞான
அரனருள்சற் புதல்வோனே
அருணகிரிப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

## 9

18. நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீயறி யாயோ ?
பொன்னனையாய் ! வெண் பனிமுடி யிமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே !
என்ன தவங்கள் செய்து எத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே ?
இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ ?
இன்னுயிரே ! பள்ளி யெழுந்தருளாயே !

—பாரதியார்

19. நீதா னெத் தனையாலும்
நீடுழி க்ருபையாகி
மாதானத் தனமான
மா ஞானக் கழல்தாராய்
வேதா மைத் துனவேளே
வீராசற் குணசீலா
ஆதாரத் தொளியானே
ஆரூரிற் பெருமாளே.

—அருணகிரிநாதர்

## 10

20. புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின, கேளாய் !
வீதியெலாம் அணுகுற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னைஎம் அன்னை !
ஆருயிரே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

—பாரதியார்

21. கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாயவன்தன் வாய்ச்சுவையும் வாசமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

—ஆண்டாள்

## 11

22. பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்திஅப்
பனி மலர் எடுக்க மனமும்

நண்ணேன் அலாமல் இரு கைதான் குவிக்க எனில்
நாணும் என்உளம் நிற்றிநீ
நான் கும்பிடும்போது அரைக்கும்பி டாதலால்
நான் பூசை செய்யல் முறையோ
விண்ணே விணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே வேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவ்வித்தின் முளையே
கண்ணே கருத்தே என் எண்ணே எழுத்தே
கதிக்கான மோன வடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

—தாயுமானவர்

23. வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனஉன்
பாதங்கள் இவைஎன்னில் படிவங்கள் எப்படியோ
ஓதங்கொள் கடலன்றி ஒன்றினே டொன்றுவ்வாப்
பூதங்கள்தொறும் உறைந்தால் அவைஉன்னைப்
[பொறுக்குமோ.

24. தாய்தன்னை அறியாத கன்றில்லை அக்கன்றை
ஆயும் அறியும் உலகின்தாய் ஆகி, ஐய!
நீஅறிதி எப்பொருளும் அவைஉன்னை நிலையறியா
மாயையிது என்கொலோ, வாராதே வரவல்லாய்!

—கம்பர்

## 12

25. வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்

வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

—மாணிக்கவாசகர்

26. கற்றுங் கெரிஓம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே.

27. செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

—சம்பந்தர்

# மாலை வணக்கப் பாடல்கள்

## 1

1. சொல்லுவோம் அன்பினன் யாரெனக் கேளீர்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர் தம்துக்கத்தை எரிப்பவனாயினும்
எள்ளளவும் கர்வம் அடையானே.

மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே
சொல்மனம் உடலதில் சுத்தம தானவன்
ஜோதியுற்றாள் பெற்ற தாய்தானே.

பாவப் பேராசையற்றுப் பார்வை சமத்வமுற்று
பரஸ்திரியைத் தாயெனப் பணிவானே
நாவினால் பொய்மொழி நவிலவும் மாட்டான்
நாளும் பிறர்செல்வம் தீண்டானே.

மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனதில் வைராக்கிய முறுவானே
ஓயாமல் தேவனை உள்ளம் நினைந்திட
உண்டு புண்ணியப் புனல் உடலதிலே.

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே
பாமரர் பார்த்திடப் பற்பல தலைமுறை
பாவனம் அடைந்திடச் செய்வானே.

—"வைஷ்ணவ ஜனதோ" மொழிபெயர்ப்பு

2. அருள் ஜோதியே! வழிகாட்டிடு என்னை
அழைத்துமே ஐய சென்றிடு
இருள் சூழுதே அப்பா எங்கு நான் செல்வேன்
இல்லம் தூரத்தில் ஆச்சுதே

மருளும் உற்றன என்தன் பாதங்கள்
மன்னவா அருள் செய்குவாய்
பொருள்பல இனி பார்க்க வேண்டிலேன்
போதும் இந்த அனுபவம்.

வழிஎனக்கு நீ காட்டுக என
வந்தனை செய்தறிகிலேன்
விழி குறித்திட்ட படியிது வரை
வேகமாய்ச் சென்ற பாவியேன்
வழி பயம் உண்டு ஆயினும் டம்பம்
வளர்திமிர் கொண்டு சென்றனன்
பழி மிகுந்த என் பழைய நாட்களை
பரனே நீயும் மறப்பையோ ?

அகதியின் மீது ஆசி தந்திடு
அது இங்கு வழி காட்டிடும்
சகதி தன்னையும் சரளைக் கல்லையும்
சரமழையையும் தாண்டுவேன்
அகன்றிடும் இருள் அருண காலத்தில்
அமரர் புன்னகை காணுவேன்
பகலைப் பார்த்திட ஆர்வமுற்றனன்
பரமனே வழி காட்டுவாய். (அருள் ஜோதி)

—நியூமன் பாடலின் மொழிபெயர்ப்பு

## 2

3\. எடுத்த காரியம் யாவினும் வெற்றி,
எங்கு நோக்கினும் வெற்றி மற்றுங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி,
வேண்டி னேனுக் கருளினள் காளி ;
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரும் மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி,
பாரில் வெற்றி எனக்குறு மாறே. —பாரதியார்

4. அன்பே பிரதானம் — சகோதர
அன்பே பிரதானம் (அன்பே)

பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விச்வாசம் இவைகளி லெல்லாம் (அன்பே)

பலபல பாஷை படித்தறிந் தாலும்
கலகல வென்னும் கைம் மணியாமே (அன்பே)

சாந்தமும் தயையும் சகலநற் குணமும்
போந்த சத்தியமும் பொறுமையு முள்ள (அன்பே)

—பைபிள் பகுதியின் கருத்து

## 3

5. உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்ப ரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

6. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு-
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்

## 4

7. ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

கணபதிராயன்—அவனிரு
காலைப் பிடித்திடுவோம்;
குண முயர்ந்திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே. (ஓம்)

வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;
சுற்றி நில்லாதே போ!—பகையே!
துள்ளி வருகுது வேல். (ஓம்)

பாம்புத் தலைமேலே—நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்;
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம். (ஓம்)

செல்வத் திருமகளைத்—திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்;
செல்வ மெல்லாந் தருவாள்—நமதொளி
திக்கனைத்தும் பரவும். (ஓம்)

தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (ஓம்)

சொல்லுக் கடங்காவே—பராசக்தி
சூரத் தனங்க ளெல்லாம்;
வல்லமை தந்திடுவாள்—பராசக்தி
வாழி யென்றே துதிப்போம். (ஓம்)

—பாரதியார்

8. பக்தியால் யானுன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

## 5

9. பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய் !

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே.

பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான்—நன்னெஞ்சே !
பரமன் வாழ்கின்றான். (பகைவனு)

சிப்பியிலே நல்லமுத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ ?—நன்னெஞ்சே !
செய்தி யறியாயோ.

குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடிவளராதோ?—நன்னெஞ்சே!
கொடிவளராதோ ? (பகைவனு)

—பாரதியார்

10. திருத்தாய் செம்போத்தே—திருமாமகள் தன் கணவன்
மருத்தார் தொல் புகழ் மாதவனை வரத்
திருத்தாய் செம் போத் தே.

கரையாய் காக்கைப்பிள்ளாய்—கரு மாமுகில் போல்
உரையார் தொல்புகழ் உத்தமனை வரக் [நிறத்தன்
கரையாய் காக்கைப் பிள்ளாய்.

~~கூவாய் பூங்குயிலே—குளிர் மாமுகில் போல் நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தமனை வரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய்.~~

கூவாய் பூங்குயிலே—குளிர் மாரி தடுத்துகந்த
மாவாய் கீண்ட மணி வண்ணனை வரக்
கூவாய் பூங்குயிலே.

கொட்டாய் பல்லிக்குட்டி—குடம் ஆடி உலகளந்த
மட்டார் பூங்குழல் மாதவனை வரக்
கொட்டாய் பல்லிக்குட்டி.

சொல்லாய் பைங்கிளியே—சுடர் ஆழி வலனுயர்த்த
மல்லார் தோள்வட வேங்கட வனைவரச்
சொல்லாய் பைங்கிளியே.

—**திருமங்கை ஆழ்வார்**

## 6

11. தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை உரி போர்த்துப்
பேய் வாழ் காட்டகத் தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.

நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன் சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பைவாய் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையாற் பயன் என்.

கால்களால் பயனென் - கறைக்
கண்டனுயர் கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களால் பயன் என்.

உற்றார் ஆர்உளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆர் உளரோ.

இறுமாந்திருப்பன் கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறு மான்ஏந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ.

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன். (தலையே)

—அப்பர்

12. பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

—அப்பர்

## 7

13. ஆத்தி சூடி, இளம்பிறை யணிந்து,
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான் ;
கருநிறங் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன் ;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன் ;
ஏசுவின் தந்தை : எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம் பொருள்
ஒன்றே : அதனியல் ஒளியுறும் அறிவாம் ;
அதன்நிலை கண்டார் அல்லலை அகற்றினர் ;
அதன்அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

—பாரதியார்

14. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்(கு) யாது மோர் குறைவிலை
கண்ணில் நல்லஃது றும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

—சம்பந்தர்

## 8

15. பொறுமையே உனைக் காக்கும் அதே உன்தன்
பெருந்துயர் தனைநீக்கும் (பொறுமை)

வறுமையும் துன்பமும் பிறவியின் நிழலாம்
மருமம் அறிந்து நல் அறிவு கொள்வாய் உயர்
(பொறுமை)

தோற்றுவன வெல்லாம் தோற்றத்தில் பலியாது
தோன்றிய தோற்றமே தோல்விக்குத் துணையாம்
கானல் நீர் அல்லவோ இம்மானிட வாழ்க்கை
கருத்தில் இருத்தி நல் அறிவு கொள்வாய் உயர்
(பொறுமை)

—வேதநாயகம் பிள்ளை

16. சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச் சென்னி
பொன்மாலை மார்பன்னென்
புதுநலமுண் டிகழ்வானே.

—அப்பர்

## 9

17. ஆடுமயிலே நிர்த்தம் ஆடுமயிலே - தணிகை
ஆறுமுக நாதன் வர ஆடுமயிலே
பாடும் அடியார் பரவ ஆடுமயிலே - சம்
பந்தன் வர என்தன் முனம் ஆடுமயிலே.

தணிகைமலைத் தேவன் வர ஆடுமயிலே - ததிம்
தத்திம் தத்திம் தத்திமென ஆடுமயிலே
பணியுமெனைக் காத்து வர ஆடுமயிலே - பரன்
பாலகுகன் ஏறிவர ஆடுமயிலே.

தேவாதி தேவனென் றுடுமயிலே - திருச்
செங்கோட்டு வேலனென் றுடுமயிலே
சாவாப் பிரசாதந் தந் தாடுமயிலே - தனத்
தந்தான தான வென் றுடுமயிலே

வேலா விசாகா என் றுடுமயிலே - மலை
வேந்தா குமாரா என் றுடுமயிலே
பாலா விநோதா என் றுடுமயிலே - மலர்ப்
பாதா குகேசா என் றுடுமயிலே.

கோடி நமஸ்காரம் உனக் காடுமயிலே—கோடிக்
கோடி நமஸ்காரம் உனக் காடுமயிலே
பாடிஉனைப் போற்றுகின்றேன் ஆடுமயிலே—ஆடிப்
பாடிப் பாடிப் போற்றுகின்றேன் ஆடு மயிலே.

—செங்கல்வராய பிள்ளை

18. எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணியே நின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னை.

—பாரதியார்

## 10

19. பிடியத னுரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே.

—சம்பந்தர்

20. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கை ஆழ்வார்

## 11

21. மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்.

—அப்பர்

22. எனக்கினித் தினைத்தனை புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படு பரவையின் கரைமேல்
எனக் கினியவன் தமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினியவன் தன திடம்வலம் புரமே.

23. கொங்கணை சுரும்புண நெருங்கிய குளிரிளம்
தெங்கொடு பனை பழம் படுமிடம் தேவர்கள்
தங்கிடும் இடந் தடங் கடல் திரை புடைதர
எங்கள தடிகள் நல் இடம் வலம் புரமே.

—சுந்தரர்

## 12

24. தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற
சுடரே! தொடக்கறுத்தோர் சுற்றமே! பற்றி
நீந்த அரிய நெடுங்கருணைக் கெல்லாம்
நிலையமே! வேதம் நெறிமுறையின் நேடி

ஆய்ந்த உணர்வின் உணர்வே ! பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்
எய்ந்த வரம்உதவ எய்தினையே எந்தாய் !
இருநிலத்தவோ நின் இணையடித் தாமரைதாம்.

—கம்பர்

25. அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருட் பெறுவேனோ
இபமா முகன் தனக் கிளையோனே
இமவான் மடந்தை உத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருஆவி னன்குடிப் பெருமாளே.

—திருப்புகழ்

# நாமாவளி

ரகுபதி ராகவ ராஜாராம்
பதித பாவன ஸீதாராம்

ஈச்வர அல்லா தேரே நாம்
சப்கோ சந்மதி தே பகவான்

பஜமன ப்யாரே ராமரஹீம்
பஜமன ப்யாரே க்ருஷ்ணகரீம்

ராம ராம ஜய ராஜாராம்
ராம ராம ஜய ஸீதாராம்.

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே

சிவசிவசிவசிவ சின்மயதேசா
சிவசுந்தர குஞ்சித நடராசா

மலைதருமகளே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே

ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே

அரிபிர மாதியர் தேடியநாதா
அரஹரசிவசிவ ஆடியபாதா. (அம்பல)

சம்போ சங்கர கௌரீசா—சிவ
சாம்ப சங்கர கௌரீசா
சாம கானப்ரிய கௌரீசா—சிவ
சாம்ப சங்கர கௌரீசா.

4. ராஜா ராம ராம ராமசீதா ராம ராம ராம்
சீதா ராம ராம ராமசீதா ராம ராம ராம்.

5. நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமி ப்ரிய நடராஜா.

6. சங்கர சிவா சிவ சங்கர சிவா
சம்போ மகாதேவ சாம்ப சிவா.

7. ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச பாஹிமாம்
ஜய்கணேச ஜய்கணேச ஜய்கணேச ரக்ஷமாம்.

8. யமுனா தீர விஹாரி
ப்ருந்தா வன சஞ்சாரி
கோவர்த்தன கிரி தாரி
கோபால க்ருஷ்ண முராரி.

9. நாராயண நாராயண ஜயகோவிந்த ஹரே
நாராயண நாராயண ஜயகோபால ஹரே.

10. பஜகோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம்பஜ மூடமதே
பஜகோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம்பஜ மூடமதே
ஹரிநாராயண ஹரிநாராயண நாராயணம்பஜ மூடமதே
ஜானகிரமணம் பரமபுருஷம் கோவிந்தம்பஜ மூடமதே
முகுந்தமுராஹர முரளீலோல கோவிந்தம்பஜ மூடமதே.

# தனிப் பாடல்கள்

## சம்பந்தர் தேவாரம்

**தோ**டுடையசெவி யன்விடை ஏறியோர்
தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாள் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மான் இவன் அன்றே. 1

அருநெறிய மறை வல்ல முனியகன்
பொய்கை அலர் மேய
பெருநெறியபிர மாபுர மேவிய
பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்
பந்தன் னுரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே. 2

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார் புனல் செல்வ மல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 3

வண்டார் குழல் அரிவையொடு பிரியாவகை பாகம்
பெண்தான் மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்தாமரை மலராள்உறை தவளந்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே. 4

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே. 5

பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே. 6

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி உரி மூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானமென் னீரே. 7

சிலைதனை நடுவிடை நிறுவியொர்
சினமலி அரவது கொடுதிவி
தலமலி சுரரசுரர்களொலி
சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ அவருடல்
குலைதர அதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய
மறைவனம் அமர்தரு பரமனே. 8

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவம் என்கொலோ. 9

ஒடுங்கும் பிணிபிறவி கேடென் றிவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் இடம்கருதி நின்றீர்எல்லாம்
அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம்வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவிஎங்கும்
கெழுமனைகள் தோறும் மறையின்னொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானைமாடம் தொழு மின்களே. 10

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே. 11

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே. 12

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொறுவின்நிரை யோடும்
ஆமாம் பிணைவந்து அணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 13

தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவம்மொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்
குமிழின் மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ் சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. 14

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 15

செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங் குற்றாலம்
வில்லின் ஒல்க மும்மதி லெய்து வினைபோக
நல்குநம்பான் நன்னகர் போலுங் நமரங்காள். 16

ஆறுடு சடைமுடியன் அனலாடு மலர்க்கையன்
இமயப் பாவை
கூறுடு திருவுருவன் கூத்தாடுங் குணமுடையோன்
குளிருங் கோயில்
சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு
சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடும்
மிழலை யாமே. 17

நீறுசேர் வதோர் மேனியர் நேரிழை
கூறுசேர் வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர்பராய்த் துறை
ஆறு சேர்சடை அண்ணலே. 18

செல்வம் மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற் சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வ மாம்இவை செப்பவே. 19

மாதர் மடப்பிடியும்மட அன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூத இனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந் நெடு முடியதோர் புனலர்

வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரைந் நுரை கரை பொருது விம்மி நின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே. 20

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டு எம்பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 21

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. 22

மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தில் உள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே. 23

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 24

எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்று கைகூடுவ தன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே. 25

பொங்கு வெண்மணற் கானல் பொருகடல் திரைதவழ் முத்தம்
கங்குல் ஆரிருள் போழுங் கலிமறைக் காடமர்ந்தார் தாம்
திங்கள் சூடினரேனும் திரிபுரம் எரித்தனரேனும்
எங்கும் எங்கள் பிரானார் புகழ் அல திகழ்பழி இலரே. 26

மான வாழ்க்கையது உடையார் மலைந்தவர் மதிற் பரி சறுத்தார்
தான வாழ்க்கையது உடையார் தவத்தொடு நாம்புகழ்ந் தேத்த
ஞான வாழ்க்கையது உடையார் நள்ளிருள் மகளிர் நின்று எத்த
வான வாழ்க்கையது உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே. 27

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே. 28

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 29

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல் கீதமும்
பல் சடைப்பனி கால் கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கஎம் தொல்வினையே. 30

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்

கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே. 31

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத்து உள்ளவே. 32

அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்ட நான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. 33

மானினேர் விழி மாதராய்வழு திக்குமா பெருந் தேவிகேள்
பானல்வா யொரு பாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்தி டேல்
ஆனை மாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளியேன் அலேன்திரு ஆலவாய் அரன் நிற்கவே. 34

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 35

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 36

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்ற நூற் கருத்தும்நீ அருத்தம் இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்து முன் னுரைப்பதென் முகம்மனே. 37

வானைக் காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக் காவில் இன்மொழித் தேவிபாக மாயினன்
ஆனைக் காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவார்க்(கு) ஏதும்ஏதம் இல்லையே. 38

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே. 39

வேதவேள் வியைநிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே
ஞாலநின் புகழேமிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே. 40

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன் பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே. 41

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. 42

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை எனுமிவர் பணிய
அந்நலம் பெறுசீர் ஆலவாய் ஈசன்
திருவடி ஆங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழ் இவை கொண்டு
இந்நலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்த வீற்றிருப்பவர் இனிதே. 43

---

## அப்பர் தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 44

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 45

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே. 46

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 47

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானே. 48

சகமலாது அடிமையில்லை தாளலால் துணையுமில்லை
நகமெலாந் தேயக்கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்துந்தொண்டர்
அகமலாற் கோயிலில்லை ஐயன்ஐயாற னார்க்கே. 49

மனமெனுந் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே.50

விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்
பரிவினாற் பெரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்திஉய்யும் வகையது நினைக்கின்றேனே.51

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே. 52

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினேமே. 53

ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே.

குனித்தபுருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம்கசிய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே. 55

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண் ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என்பாவிநெஞ்சில்
குடிகொண்ட வா தில்லை அம்பலக்கூத்தன் குரைகழலே. 56

படைக்கல மாகஉன் நாமத்தெழுத்தஞ்சு என்நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்தரனே.

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செய்தேன்
முந்திப் பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறைஅணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே. 58

ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றா உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்(கு) அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

கருவாய்க் கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன் 60
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க்(கு) இரங்கி இருந்தருள் செய் பாதிரிப்புலியூர்
செழுநீர் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங்கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே. 62

சிவன்எனும் நாமந் தனக்கே உடையசெம்மேனி எம்மான்
அவன்எனை ஆட்கொண்டளித்திடு மாகில் அவன்தனையான்
பவன்எனும் நாமம்பிடித்துத் திரிந்து பன்னாள்அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி யான்என்று எதிர்ப்படுமே.

அரிச்சுற் றவினை யால் அடர்ப்புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தார் என்றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்படா முனம்
திருச்சிற் றம்பலம் சென்றடைந்து உய்ம்மினே. 64

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான்நி லாவி இருப்பன்என் நாதனைத்
தேன்நி லாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி யிருக்கவும் வைப்பரே. 65

எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை ஆய பராபரன்
அந்த மில்புகழ் ஆரூர் அரநெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே. 66

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேபிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 67

கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிமலர்க் குழற் பாவைநல் லாரினும்
தனிமுடி கவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 68

நம்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே. 69

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னுளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 70

தொழுது தூமலர் தூவித் துதித்துநின் று
அழுது காமுற்(று) அரற்றுகின் றூரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே. 71

அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
இஞ்சி மாமதில் எய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. 72

தொண்டு பாடியுந் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி யேத்தியும்
பண்ட ரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டு அடியேன் உய்ந்து போவனே. 73

கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற்(று) என்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே. 74

நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 75

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வார்மாற் பேறரே. 76

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டென் செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே. 77

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்(கு) அன்புடைத் தொண்டர்கள் 78
அமர லோகம தாளுடை யார்களே.

கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்கானூ ரீசனை
எல்லியும் பகலும் இசை வானவா
சொல்லி டீர்நுந் துயரங்கள் தீரவே. 79

தாயத் தார்தமர் நல்நிதி யென்னும்இம்
மாயத் தேகிடந் திட்டு மயங்கிடேல்
காயத் தேயுளன் கானூர் முளையினை
வாயத் தால்வணங் கீர்வினை மாயவே. 80

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 81

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்(று) எத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 82

குறிகளும் அடை யாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே. 83

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 84

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே. 85

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 86

மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ ஞகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே. 87

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. 88

மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந்தால் கனிஉண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே. 89

கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்
கொங்கு தண்குமரித் துறை ஆடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே. 90

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தியான் அவன்என் கண்ணு ளானே. 91

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானை தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திரு ஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 92

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
 தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
 கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
 மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
 மறைக் காட்டுறையும் மணாளன் தானே. 93

மூரி முழங்கொலிநீர் ஆனான் கண்டாய்
 முழுத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
 இன்னடியார்க்(கு) இன்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
 அண்ணாமலை யுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
 மறைக்காட் டுறையும் மாணாளன் தானே. 94

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
 நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
 பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
 சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
 ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 95

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
 பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
 சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்

உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உனையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்றா நில்லே. 96

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்(கு) ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 97

எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம் நினைந்தங்கு உவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்த ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 98

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாம னும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 99

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டு வித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டு வித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக் காலே. 100

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீ றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணு வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே. 101

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணு ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியா ராகில்
அளியற்றூர் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றூரே. 102

நின்னுவார் பிறரன்றி நீயே ஆனுய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானுய்
மன்னுனுய் மன்னவர்க்கோர் அமுதம் ஆனுய்
மறைநான்கும் ஆனுய் ஆறங்க மானுய்

பொன்னானைய் மணியானைய் போக மானைய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானைய் என்னானைய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே. 103

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியோடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 104

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லால்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே. 105

நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே. 106

## சுந்தரர் தேவாரம்

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக் காளாயினி அல்லேனென லாமே. 107

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லே னெனலாமே. 108

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள்ள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே. 109

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 110

நீள நினைந்தடியேன் உமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணியே. 111

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர்த் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெட லுமாம்
அம்மை யேசிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே. 112

புல்நு னைப்பனி வெங்கதிர் கண்டாற் போலும்
வாழ்க்கை பொருளில்லை நாளும்
என்னெ னக்கினி யிற்றைக்கு நாளை
என்றி ருந்திட உற்றன் எந்தாய்
முன்ன மேயுள சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்ன மென்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 113

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற-
வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே. 115

எனக்கினித் தினைத்தனை புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்றமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்றன திடம் வலம் புரமே. 116

கொங்கணை சுரும்புண நெருங்கிய குளிரிளம்
தெங்கொடு பனைபழம் படுமிடந் தேவர்கள்
தங்கிடும் இடந்தடங் கடல்திரை புடைதர
எங்களதடிகள்நல் இடம் வலம் புரமே. 117

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடை குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 118

எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்டு எனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 119

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும் பேணிஉன் கழல் ஏத்துவார்கள்
மற்றோர் பற்றிலர் என்றிரங்கி மதியுடையவர் செய்கை செய்வீர்
அற்றபோழ்தும் அலர்ந்தபோழ்தும் ஆபற்காலத் தடிகேளும்மை
ஒற்றி வைத்திங் குண்ணலாமோ ஓணகாந்தன் தளியுளீரே. 120

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின் தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரம் என்னீரே. 121

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அது தன்னைத்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்

புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம் மானே. 122

---

## திருவாசகம்

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லாம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி ஆடுவோமே. 124

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 125

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 126

போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாஉயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாஉயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 128

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 129

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமும் அவர்தம்மை யார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை யன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 130

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங்காண்தொறும்பேசுந்தொறுமெப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.131

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 133

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 134

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றேம்அவ மேஇந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 135

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனிஉன்னை என்னிரக் கேனே. 136

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 137

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே. 138

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐய னேயென் றுன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 139

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 140

---

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்

இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முனேடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை
மகிழ் கதிர் காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே. 141

அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவர் இன்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலும் அமர்ந்த பெருமாளே. 142

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந் தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தைஉத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன் குடிப் பெருமாளே. 143

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த மாறன் பதிமிகு கூடலில் உறைவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே. 144

ஏறுமயி லேறி விளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள் நீஅருளல் வேண்டும்
ஆதிஅரு ணாசலம் அமர்ந்த பெருமாளே. 145

ஒருபொழுதும் இருசரண நேசத்தேவைத் துணரேனே
உனது பழனி மலையெனும் ஊரைச் சேவித் தறியேனே
பெருபுவியில் உயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனென் ஆசைப் பாடைத் தவிரேனே
துரிதமிடு நிருதர்புர சூரைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி னோதக் காரப் பெருமாளே
விறல் மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே. 146

கருவினுரு வாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனாலே
கரிய குழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி

அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
அசன மிடு வார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அனுதினமும் நாண மின்றி அழிவேனே
உரகபட மேல் வளர்ந்த பெரிய பெரு மாள ரங்கர்
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருது கவி ராஜ சிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற பெருமாளே. 147

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே
பதி ஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மணமேவு வாலக் குமரேசா
சிலைவேடர் சேவற் கொடியோனே
திருவால வாயிற் பெருமாளே. 148

காதின்மணி ஒலையிட்டு வருமானுர்
காமவலை ஊடுபுக்கு மதிமாழ்கி
நீதிநெறி யேவிடுத்து மலையாதே
நீயுனிரு தாளளிக்க வரவேணும்
ஆதிமக மாயிபெற்ற குமரேசா
ஆறுமுக மேபடைத்த குருநாதா
தீதிலடி யார்மனத்தில் உறைவோனே
தேவர்குடி வாழவைத்த பெருமாளே. 149

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
சோலைமலைக் குரியானே ஸ்வாமிமலைப் பெருமாளே. 150

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே. 151

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே. 152

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதுரத்ன மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுற நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியும் நீகொடுத்து
தவிபுரிய வேணும் நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்மம் அனுதினமு மேதுதிக்க
அரிய தமிழ்தான ளித்த மயில்வீரா
அதிசயம னேகமுற்ற பழனிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே. 153

திருமகள் உலாவும் இரு புயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர் பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரவு சடை ஈசர்
அருள் செய்குரு நாதப் பெருமாள்காண்

இருவினை யிலாத திருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே. 154

நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ர சொரூபா நமோநம
ஞான பண்டித சாமீந மோநம வெகுகோடி
ஞான சய்புகு மாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்த மயூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீநமோ நம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈதலும் பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையும் மறவேனே
ஏழ் தலம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமுன் நாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி அந்தஉ லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே. 155

நீதத் துவமாகி நேமத் துணையாகிப்
பூதத் தயவான போதைத் தருவாயே

நாதத் தொனியோனே　　ஞானக் கடலோனே
கோதற் றமுதான　　கூடற் பெருமாளே. 156

நீலங்கொள் மேகத்தின்　　மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண்　　டதனாலே
மால்கொண்ட பேதைக்குன்　　மணநாறும்
மார்தங்கு தாரைத்தந்　　தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண்　　டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங்　　குலகாலா
நாலங்க வேதத்தின்　　பொருளோனே
நானென்று மார்தட்டும்　　பெருமாளே. 157

பாதி மதிநதி போது மணிசடை
நாதன் அருளிய　　குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய　　மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாயன் அரிதிரு　　மருகோனே
கால னெனைஅணு காமல் உனதிரு
காலில் வழிபட　　அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு　　சிறைமீளா
ஆடு மயிலினில் எறி அமரர்கள்
சூழ வலம்வரும்　　இளையோனே
சூத மிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனில்　　உறைவோனே
சூரன் உடலற வாரி சுவறிட
வேலை விடவல　　பெருமாளே. 158

பிறவியலை ஆற்றினிற்　　புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்　　றலையாதே
உறுதிகுரு வாக்கியப்　　பொருளாலே
உனதுபத காட்சியைத்　　தருவாயே

அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவன் எத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே. 159

மணத்துக் கடம்பு புனைதோளா
வலத்துற் றெதிர்ந்து பொருசூரர்
நிணத்திற் றுளைந்த வடிவேலா
நிலத்திற் பொலிந்த வயலூரா
வணத்திற் கிளர்ந்த மயில்வாகா
மனத்திற் புகுந்து க்ருபையீவாய்
குணத்திற் சிறந்த மகராசி
குறத்திக் கிசைந்த பெருமாளே. 160

வசன மிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றில் உழலாதே
இசை பயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசௌ பாக்யம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழனிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே. 161

---

### கந்தர் அலங்காரம்

பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்றபேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன் பினால்மெல்ல மெல்லவுள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம் தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படிஇருங் கோள்எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே. 164

தண்டாயுதமுந் திரிசூல மும்விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய் அடாஅந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி
விழிக்குத் துணைவடிவேலும் செங்கோடன் மயூரமுமே.167

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

---

## ஆழ்வார் பாடல்கள்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு,
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா, உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு. 169

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்
பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும்
பல்லாண்டு,
படை போர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும்
பல்லாண்டே. 170

—பெரியாழ்வார்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்,
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்,
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கம்,
கார் மேனிச் செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான்,
நாரா யணனே நமக்கே பறை தருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோரெம் பாவாய். 171

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்,
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யு மாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 172

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி,
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து,
ஓங்கு பெருஞ் செந் நெலூடு கய லுகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டுகண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 173

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூமம் கமழத் துயிலணை மேல் கண் வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ, உம் மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தனென் றென்று
நாமம் பலவும் நவின்றேலோரெம் பாவாய். 174

மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்,
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப் பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோ ரெம்பாவாய். 175

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூ வே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 176

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற் கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன்வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான். 177

—ஆண்டாள்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே. 178

உம்பர் உல காண் டொரு குடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே. 179

எத்தனையும்வான் மறந்தகாலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டம்மா என்
சித்தம் மிகஉன் பாலே வைப்பன் அடியேனே. 180

மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன் மா மதிள் புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ. 181

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக்கே அருளி
ஆராஅன் பிளையவனோ டருங்கானம் அடைந்தவனே
சீராளும் வரைமார்பா திருக்கண்ணபுரத் தரசே
தாராளும் நீண்முடி என் தாசரதீ தாலேலோ. 182

—குலசேகர ஆழ்வார்

தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்,
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்,

நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே. 183

—திருமழிசை ஆழ்வார்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே. 185

கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டு
பொங்கு நீர் பரந்துபாயும் பூம்பொழில் அரங்கந்தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே.

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே. 187

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமல ரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலை கடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி எழுந் தருளாயே. 188

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி,
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து,
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 189

குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 190

தாயே தந்தையென்றும் தாரமேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் நுன்னைக்காண்ப தோராசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திரு வேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாள் என்னைக் கொண்டருளே.

தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்துமிட்டேன்
பெரியேன் ஆயினபின் பிறர்க்கேஉழைத் தேழைஆனேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா
அரியே வந்தடைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச்சென்று வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநும் சென்னிவைப்பீர்,

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 193

திருத்தாய் செம்போத்தே
திருமாமகள் தன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்
திருத்தாய் செம்போத்தே. 194

கரையாய் காக்கைப் பிள்ளாய்
கருமா முகில்போல் நிறத்தன்
உரையார் தொல் புகழ் உத்தமனைவரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய். 195

கூவாய் பூங்குயிலே
குளிர்மாரி தடுத்துகந்த
மாவாய்கீண்ட மணிவண்ணனைவரக்
கூவாய் பூங்குயிலே. 196

கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி உலகளந்த
மட்டார் பூங்குழல் மாதவனைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி. 197

சொல்லாய் பைங்கிளியே
சுடராழி வலனுயர்த்த
மல்லார்தோள்வட வேங்கடவனைவரச்
சொல்லாய் பைங்கிளியே. 198

காமற்கென் கடவேன்
கருமாமுகில் வண்ணற்கல்லால்
பூமேல் ஐங்கணை கோத்துப்புகுந் தெய்யக்
காமற்கென் கடவேன். 199

கோழி கூவென்னுமால்
தோழி நானென் செய்கேன்
ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று
கோழி கூவென்னுமால். 200

இங்கே போதுங்கொலோ
இனவேல் நெடுங்கண் களிப்ப
கொங்கார்சோலைக் குடந்தைக் கிடந்தமால்
இங்கே போதுங்கொலோ. 201

இன்னார் என்றறியேன்
அன்னே ஆழியொடும்
பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை
இன்னார்என் றறியேன். 203

தொண்டீர் பாடுமினோ
சுரும்பார்பொழில் மங்கையர்கோன்
ஒண்தார்வேல் கலியன்ஒலி மாலைகள்
தொண்டீர் பாடுமினோ. 204

—திருமங்கை ஆழ்வார்

உணர்வாரார் உன்பெருமை ஊழிதோ றூழி
உணர்வாரார் உன்னுருவந் தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய் நால்வேதப்
பண்ணகத்தாய் நீகிடந்த பால். 205

—பொய்கை ஆழ்வார்

அச்சுதன் அமலன் என்கோ அடியவர் வினைகெடுக்கும்
நச்சுமாமருந்தம் என்கோ நலங்கெடல் அமுதம் என்கோ
அச்சுவைக்கட்டி என்கோ அறுசுவை அடிசில் என்கோ
நெய்ச்சுவைத்தேறல் என்கோ கனியென்கோ பால்என்கேனோ.

ஒளிமணிவண்ணன் என்கோ ஒருவனென் றேத்தநின்ற
நளிர்மதிச்சடையன் என்கோ நான்முகக் கடவுள் என்கோ

அளிமகிழ்ந் துலகமெல்லாம் படைத்தவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான் கண்ணனை மாயனையே. 207

நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்ருர் கரைந்தேங்க
எண்ணுராத் துயர்விளைக்கும் இவையென்ன உலகியற்கை
கண்ணுளா கடல்கடைந்தாய் உனகழற்கே வரும்பரிசு
தண்ணுவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே. 208

பொலிகபொலிகபொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும்நரகமும்நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை
கலியும்கெடும் கண்டுகொள்மின் கடல்வண்ணன் பூதங்கள்மண்மேல்
மலியப்புகுந்திசை பாடி ஆடி யுழிதரக் கண்டோம். 209

உலகமுண்ட பெருவாயா உலப்பில் கீர்த்தியம்மானே
நிலவும்சுடர் சூழ்ஒளிமூர்த்தி நெடியாய்அடியேன் ஆருயிரே
திலதம் உலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம் பெருமானே
குலதொல்லடியேன் உனபாதம் கூடுமாறு கூருயே. 210

யானும்தானுய் ஒழிந்தானை யாதும்யவர்க்கும் முன்னேனை
தானும் சிவனும் பிரமனு மாகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும் அமுது மாகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வினில் நின்றஒன்றை உணர்ந்தேனே.

—நம்மாழ்வார்

---

## தாயுமானவர் பாடல்

அங்கிங் கெனுதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்த தெது மன வாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமய கோடிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய்வம் என்று. 212

எங்கும்தொடர்ந் தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெரு வழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ள தெது மேல்
கங்குல் பகல் அற நின்ற எல்லை உளதெது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன எலாம் மோன உருவெளிய தாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம். 213

ஐவகையெனும் பூத மாதியை வகுத்து அதனுள்
அசர சர பேத மான
யாவையும்வகுத்து நல்லறிவையும் வகுத்து மறை
யாதி நூலையும் வகுத்துச்
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்துமேல்
சமயம் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ உன்னை நான் அணுகவும்
தண்ணருள் வகுக்க இலையோ?
பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யர் அறிவில்
போத பரிபூரண அகண்டிதா காரமாய்ப்
போக்கு வர வற்ற பொருளே
தெய்வ மறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்க வரு தக்ஷிண மூர்த்தியே
சின் மயானந்த குருவே. 214

அரும் பொனே மணியே என் அன்பே என் அன்பான
அறிவேஎன் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி

விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
    மெய் சிலிர்த் திரு கை கூப்பி
  விண்மாரி என என் இரு கண் மாரி பெய்யவே
    வேசற்று அயர்ந்தேன் யான்
இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனு ைலும் உன்னை
    இடைவிட்டு நின்றதுண்டோ
  என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ
    யாதேனும் அறியா வெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ
    தொண்ட ரொடு கூட்டு கண்டாய்
  சுத்த நிர்க் குணமான பர தெய்வமே பரஞ்
    சோதியே சுக வாரியே. 215

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்
    என் இதயமும் ஒடுங்கவில்லை
  யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவிலை
    யாதினும் அபிமானம் என்
சித்தமிசை குடிகொண்டது ஈகையொ டிரக்கம் என்
    சென்மத்தும் நானறிகிலேன்
  சீலமொடு தவவிரதம் ஒருகன விலாயினும்
    தெரிசனம் கண்டும் அறியேன்
பொய்த்த மொழியல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
    புகன்றிடேன் பிறர் கேட்கவே
  போதிப்பதல்லாது சும்மா இருந்தருள்
    பொருந்திடாப் பேதை நானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
    அவனி மிசை உண்டோ சொலாய்
  அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
    ஆனந்த மான பரமே. 216

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன் கர்ம
துஷ்டதே வதைக ளில்லை
துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே
தொழும்பன் அன்பு அபிஷேக நீர்
உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம் ப்ராணன்
ஓங்குமதி தூப தீபம்
ஒருகால மன்றிது சதா கால பூசையா
ஒப்புவித் தேன் கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யரசம் யாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன் அறிவூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரும் நல்ல உறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. 217

---

## சிலப்பதிகாரப் பாடல்கள்

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தஎல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன்வாழி காவேரி.

பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசை பாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகசைய நடந்த எல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழிகாவேரி. 219

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய். 220

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய். 221

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணா பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட் கைத்தே. 222

அறுபொருள் இவனென்றே அமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டஅது
வண்துழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே. 223

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராய ணாஎன்னா நாவென்ன நாவே. 225

—இளங்கோ அடிகள்

---

## புத்தர் வணக்கம்

ஆதியங் கடவுளை அருமறை அருகனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் திருவடி தொழுதனம். 226

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும். 227

ஆரருள் பயந்தனை ஆழ்துயர் தவிர்த்தனை
ஓரருள் ஆழியை உலகுடை யொருவனை
சீரருள் மொழியைநின் திருவடி தொழுதனம். 228

—பழம்பாடல்

---

## திருவிசைப்பா

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
    பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
    சுந்தரத் தரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
அரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
    மையல்கொண் டையுறும் வகையே. 229

—சேந்தனார்

---

## கந்தபுராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம். 230

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

—கச்சியப்ப முனிவர்

---

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

மாற்றறியாத செழும்பசும் பொன்னே
 மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறியாத பெருந்தவ ருள்ளக்
 கோயிலிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறியாத சிற்றம்பலக் கனியே
 விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறியாத என் சாற்றுங் களித்தாய்
 தனிநட ராஜஎன் சற்குரு மணியே. 232

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
 சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
 அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நெறிதனிலே ஞான
 நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்த ரவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
 மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே. 233

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிய வேண்டும்
 ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
 எந்தைநின திருப்புகழை இயம்பியிடல்வேண்டும்
செப்பாத மேல்நிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
 திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
 தலைவ நினைப்பிரியாத நிலைமையும் வேண்டுவனே. 234

பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
 புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
 கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்

தங்கநிழல் பரப்பிமயற் சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே எல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. 235

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 236

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள்நின் றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே. 237

—திருஅருட்பா

—

## பிள்ளைத்தமிழ்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருசெந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன் அப்
பா வா வா வென்றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பை முலை
வள்ளி கணவா வருகவே. 238

—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

வந்தித் திடுவோம் எப்பொழுதும்
வழுத்தி யிருப்போந் திருப்புகழை
வலம்வந் திடுவோம் நின்கோயில்
மலருந் தருவோம் பூசனைக்கும்
பந்தித்திடுவோம் ஐம்பொறியும்
பரமென் றுனையே நினைந்திடுவோம்
பாலும் பழமும் உவந்தளிப்போம்
பனிக்கும் உனதே வலும்புரிவோம்
சந்திற் புழுகுங் கப்புரமுந்
தனிக்குங் குமமுங் கலந்தணிவோம்
சலசத் திறையும் மலையிறையுந்
தண்ணந் திருப்பாற் கடலிறையும்

சிந்தித் திருக்குஞ் சீறடியால்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணூர் தணிகை மலைக்கிறைவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 239

—திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்

ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டென வெடுத்து
உரையால் உணர்த்துவதை ஒழிய எவரெவர்கட்கும்
ஊன்கண் உளக்கண்ண தாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வம்இத் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை யென் றுணர்தியால்
பொழியாத புயல்தங்கு புவனமுந் திசைமுகப்
புத்தேள் பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும்
பொருளன் றிவற்கு மற்றை
அழியாத வீடுந்தரக் கடவன் இவனுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. 240

—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

கண்ணால் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகிஇரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலஞ்செய் துனது புகழ்
பண்ணால் உருகிப் புகழ்ந்து கண்ணீர்
பாயா எனையுந் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்

அண்ணல் வருக உலகமுழுது
ஆண்டாய் வருக கதிதரும்எம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்
வண்ணா வருக மயிலேறு
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே. 241

—விரிஞ்சைப் பிள்ளைத்தமிழ்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கைஅகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. 242

பெருந்தேன் இறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. 243

—மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

---

## மற்றவை

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 244

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 245

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. 246

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. 247

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 248

—திருமூலர் திருமந்திரம்

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் கரந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளைப்
பொருப்பும்விட் டயோத்தி வந்தான். 249

—கம்பர்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 250

—சேக்கிழார்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சிஏகம்பனே.251

—பட்டினத்தார்

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி செய்தநல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. 252

—சகலகலாவல்லிமாலை

பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல உள்ள மதியின்
பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்லஎன்று பெருநூல்
வேதங்கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடல் மறுகிற்
பாதங்கள்நோவ வளையிந்தனுதி பகர்வாரை ஆயுமவரே. 253

—திருவிளையாடற் புராணம்

ஆண்ட குரவன் ஆவானை
அல்லற் பிறவி அறுப்பானை
வேண்டும் பதவி தருவானை
வெளிவீட் டின்பம் அளிப்பானைத்
தூண்டல் செய்யா மணிவிளக்கைத்
தொழில்மூன் றியற்றும் தொல்லோனைக்
காண்டற்(கு) அரிய பேரொளியைக்
களாவின் நிழற்கீழ்க் கண்டேனே. 254

—கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன் பாதம்
அடைக்கலமே. 255

—தேசிகவிநாயகம் பிள்ளை

வரங்கொண்ட உமைமுலைப்பால்
மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறைஇறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன்
கண்ணைவிட்டு நீங்காவே. 256

—திருச்செந்திற் கலம்பகம்

பல்லவி

சிவலோக நாதனைக் கண்டு
சேவித்திடுவோம் வாரீர். (சிவ)

அனுபல்லவி

பவ பயங்களைப் போக்கி—அவர்
பரமபதத்தைக் கொடுப்பார் அந்தச் (சிவ)

சரணம்

மானிட சன்மங் கொடுத்தார்—தன்னை
வணங்கக் கரங்கள் அளித்தார்
தேனும் பாலும் போலச் சென்று
தேரடியில் நின்று கொண்டு (சிவ) 257

பல்லவி

ஆடும் சிதம்பரமோ—ஐயன்கூத்
தாடும் சிதம்பரமோ. (ஆடும்)

அனுபல்லவி

ஆடும் சிதம்பரம் அன்பர் களிக்கவே
நாடும் சிதம்பரம் நமச்சிவாயப் பொருள் (ஆடும்)

சரணம்

யாருமறியாமல் அம்பல வாணனார்
சீரடியார் பார்க்கச் சேவடி தூக்கியே (ஆடும்)
பாலகிருஷ்ணன் போற்றும் பனிமதிச் சடையினார்
தாள மத்தளம் போட தாதெய் தெய்என்று (ஆடும்) 258

பல்லவி

கனக சபாபதி - தரிசனம் ஒருநாள் - கண்டால் கலிதீரும்.

அனுபல்லவி

ஜனகமகாமுனி கைதொழு தேத்திய
தினகரகோடி தேஜோன் மயமாகிய (கனக)

சரணம்

மனதிலொடுங்கிய கல்மஷம் போக்கும்
மாயப் பிணியதனை மறுவடி வாக்கும்
ஜனன மரண சமுசாரத்தை நீக்கும்
திருவடி நிழலிலே கூடிய யார்க்கும் (கனக) 259

பல்லவி

இதுநல்ல சமயமையா-இரட்சிக்க-இது நல்ல சமயமையா

சரணங்கள்

இதுநல்ல சமயமையா—என்னை ரட்சித்தாளும்
ஈச மகேச நடேச சபேச (இதுநல்ல)
பாலகிருஷ்ணன் போற்றும் பாதங்களைக் காட்டிச்
சீலமுள்ள முத்தி சேருவதற்காக (இதுநல்ல) 260

—கோபாலகிருஷ்ண பாரதி

## பாரதியார் பாடல்

### மகாத்மா காந்தி வாழ்த்து

வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க வாழ்க. 261

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை ஆர்ந்து செல்வம்
குடிமையில் உயர்வு கல்வி
ஞானமும் கூடி ஓங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குள்ளே முதன்மை யுற்றாய்! 262

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்! 263

நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்,
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நம்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே இம்மூன்றும் செய். 264

பல்லவி

சொல்ல வல்லாயோ?—கிளியே!
சொல்ல நீவல்லாயோ?

அனுபல்லவி

வல்ல வேல்முருகன் தனை இங்கு
வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று (சொல்ல)

சரணங்கள்

1. தில்லை யம்பலத்தே நடனம்
செய்யும் அமரர்பிரான்—அவன்
செல்வத் திருமகனை இங்குவந்து
சேர்ந்துகலந்து மகிழ்ந்திடு வாயென்று (சொல்ல)

2. அல்லிக் குளத்தருகே—ஒருநாள்
அந்திப் பொழுதினிலே—அங்கொர்
முல்லைச் செடியதன்பாற் செய்தவினை
முற்றும் மறந்திடக் கற்றதென் னேஎன்று
(சொல்ல)

3. பாலை வனத்திடையே—தனைக் கைப்
பற்றி நடக்கையிலே—தன் கை
வேலின் மிசையாணை வைத்துச்சொன்ன
விந்தை மொழிகளைச் சிந்தை செய்வாயென்று
(சொல்ல) 265

**இறைவா! இறைவா!]** **[ராகம்—தன்யாசி**

பல்லவி

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா! (எத்தனை)

சரணங்கள்

1. சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேருமைம் பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்
(எத்தனை)

2. முக்தியென் றொருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையும் உணரும் உணர் வமைத்தாய்
பக்தியென் றொருநிலை வகுத்தாய்—எங்கள்
பரமா! பரமா! பரமா! (எத்தனை) 266

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
கண்ணும் ஆருயி ரும்மென நின்றாள்
காளித் தாயிங் கெனக்கருள் செய்தாள்
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்கள்என் பார்க்கே. 267

**வருவாய் கண்ணா!]**

பல்லவி

வருவாய் வருவாய் வருவாய்—கண்ணா!
வருவாய் வருவாய் வருவாய்!

சரணங்கள்

1. உருவாய் அறிவில் ஒளிர்வாய்—கண்ணா !
உயிரின் னமுதாய்ப் பொழிவாய்—கண்ணா !
கருவாய் என்னுள் வளர்வாய்—கண்ணா !
கமலத் திருவோ டிணைவாய்—கண்ணா ! (வரு)

2. இணைவாய் எனதா வியிலே—கண்ணா !
இதயத் தினிலே யமர்வாய்—கண்ணா !
கணைவாய் அசுரர் தலைகள் சிதறக்
கடையூ ழியிலே படையோ டெழுவாய் ! (வரு)

3. எழுவாய் கடல்மீ தினிலே எழுமோர்
இரவிக் கிணையா உளமீ தினிலே
தொழுவேன் சிவனும் நினையே—கண்ணா !
துணையே அமரர் தொழும் வானவனே!(வரு) 268

[ராகம்—புன்னாகவராளி

பல்லவி

நின்னைச் சரணடைந்தேன்—கண்ணம்மா !
நின்னைச் சரணடைந்தேன் !

சரணங்கள்

1. பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று (நின்னை)

2. மிடிமையும் அச்சமும் மேவிஎன் நெஞ்சில்
குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று (நின்னை)

3. தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவு பெறும்வண்ணம் (நின்னை)

4. துன்பம் இனியில்லை, சோர்வில்லை, தோற்பில்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட (நின்னை)

5. நல்லது தீயது நாமறியோம் அன்னை !
நல்லது நாட்டுக தீமையை ஓட்டுக ! (நின்னை) 269

வந்தே மாதரம் ஜய
வந்தே மாதரம் (வந்தே)

ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய (வந்தே)

ஆரிய பூமியில்
நாரியரும் நர
சூரியரும் சொல்லும்
வீரிய வாசகம் (வந்தே)

நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நம் தேசத்தவர்
உவந்தே சொல்வது (வந்தே)

ஒன்றாய் நின்றினி
வென்றாயினு முயிர்
சென்றாயினும் வலி
குன்றாதோதுவம் (வந்தே) 270

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக
அறம் வளர்ந்திடுக மறம் மடிவுறுக
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக
நந்தே யத்தினர் நாள்தொறும் உயர்க
வந்தேமாதரம் வந்தே மாதரம்! 271

## கொடி வணக்கப் பாடல்கள்

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே ! வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே ! ஜய ஜய ஜய (பாரத)

அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்திற்கு ஒரு புதுமை வாழ்க (பாரத)

சரணங்கள்

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரும் நாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு—இது
கணக்கின்றித் தரும் நாடு—நித்தம் நித்தம்
கணக்கின்றித் தரும் நாடு—வாழ்க (பாரத) 272

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் (தாயின்)

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் முந்திறக் கொடியினில் சக்கரம்
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பரந்தது பாரீர் (தாயின்)

பட்டுத்துகிலென லாமோ—அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந் தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப்படலம் (தாயின்)

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர்அவ் வீரர்—தங்கள்
நல்லுயிர் ஈந்துங் கொடியினைக் காப்பார் (தாயின்)

அணி யணி யாய்அவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சி ஓர் ஆனந்தம் அன்றோ
பணிகள் பொருந்திய மார்பும்—விறல்
பைந்திரு ஓங்கும் வடிவமுங் காணீர் (தாயின்)

சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க (தாயின்) 273

—பாரதியார்

## முஸ்லிம் பாடல்

பாபாத்மாவான சைத்தானிட மிருந்து ரஹீம் காப்பாராக. கருணைக் கடலான கடவுளே ஆண்டவனே போற்றி, நீயே சிருஷ்டி கர்த்தா, நீயே தலைவன், நீயே ஆண்டவன், நீயே உலகைக் காப்பவன்.

நீயே கருணை யளிப்பவன், அனைவரின் உண்மையையும் அறிபவன். நல்லவை தீயவை ஆகிய எல்லாக் கருமங்களுக்கும் இறுதியில் நீதி வழங்குபவன் நீயே.

இந்த வழிபாடெல்லாம் உனக்காகவே நடத்துகிறோம்; நாங்கள் அனைவரும் உன்னிடமே உதவி வேண்டுகிறோம்; என்றென்றும் வேண்டுவோம்.

எவர்மீது உன் கடைக்கண் செல்கிறதோ, அவர்கள் செல்லும் வழியே வழி. உன் கருணையைப் பெறாது தவறியவர்களுடைய போக்கு எமக்குத் தேவையில்லை.

ஆண்டவனே, எம் விண்ணப்பத்தை ஏற்றதாக ஒப்பம் அளி. கருணைக்கடலான ஆண்டவன் பெயருடனேயே எதையும் தொடங்குவோம்.

ஆண்டவன் ஒருவனே என்றும் உள்ளவன்; அவனுக்கே வெற்றி யென்று கூறு. அவன் பிறக்கவும் இல்லை; அவனைப் பெற்றவரும் இல்லை. அவன் ஒப்பற்றவன், புலன்களுக்கு அப்பாற் பட்டவன். 274

## வடமொழிப் பாடல்கள் முதலியன

ஓம் ஸஹ நாவவது
ஸஹ நௌ புனக்து
ஸஹ வீர்யம் கரவாவஹை
தேஜஸ்வி நாவதீதம் அஸ்து
மா வித்விஷாவஹை
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! 275

—உபநிஷதப் பாடல்

ஆசிரியர் மாணாக்கராகிய நம்மிருவரையும் கடவுள் காப்பாராக. சேர்த்துப் போஷிப்பாராக. நாம் வீரமிக்க செயல் செய்வோமாக. நாம் ஞானத்தில் மேம்பாடு பெறுவோமாக. நம்மிடை பூசல் தோன்றாதிருப்பதாக. சாந்தி.

ஈசா வாஸ்யம் இதம் சர்வம்
யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேந த்யக்தேந புஞ்ஜீதா
மாக்ருதஃ கஸ்ய ஸ்வித் தனம். 276

—ஈசோபநிஷத்

இவ்வுலகில் உள்ளவை அனைத்திலும் ஈசன் வசிக்கிறான். எனவே அவற்றைத் துறந்து உன்னை காத்துக் கொள்வாயாக. யாருடைய தனத்தையும் நீ விழையாதே.

ஓம் அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜோதிர் கமய
ம்ருத்யோ மா அம்ருதம் கமய. 277

—உபநிஷதப் பாடல்

ஆண்டவனே, என்னைப் பொய்யினின்றும் மெய்யிற் செலுத்து. இருளிலிருந்து ஒளியில் செலுத்து. அழிவிலிருந்து அழிவற்ற நிலைக்குச் செலுத்து.

வைஷ்ணவ ஜன தோ தேனே கஹியே
ஜே பீட பராயீ ஜாணே ரே!
பர துக்கே உபகார கரே தோயே
மன அபிமான ந ஆணே ரே!

ஸகல லோக மா ஸஹுனே வந்தே
நிந்தா ந கரே கேனீ ரே!
வாசகாச மன நிஶ்சல ராகே
தன தன ஜனனீ தேனீ ரே!

ஸம த்ருஷ்டினே த்ருஷ்ணு த்யாகீ
பரஸ்திரீ ஜேனே மாதரே!
ஜிஹ்வா தகீ அஸத்ய ந போலே
பர தன நவ ஜாலே ஹாதரே!

மோஹ மாயா வ்யாபே நஹி ஜேனே
த்ருட வைராக்ய ஜேனு மன்மாம்ரே!
ராம நாம ஶும் தாளீ லாகீ
ஸகள தீரத தேனு தன்மாம் ரே!

வண லோபீ னே கபட ரஹித சே
காம க்ரோத நிவார்யா ரே!
பாணே நர ஸை யோ தேனும் தர்ஸனகரதாம்
குல ஏகோ தேர தார் யாம்ரே! 278

—நாராயண மேத்தா பாடிய குஜராத்திப் பாடல்

பொருள் 'சொல்லுவோம் அன்பினன்' என்ற பாடல் (பக்கம் 15).

## பதினொரு விரதங்கள்

*அஹிம்ஸா ஸத்ய அஸ்தேய ப்ருமம்சர்ய அஸங்க்ரஹ*
*சரீர ச்ரம அஸ்வாத ஸர்வத்ர பயவர்ஜன*
*சர்வதர்மீ ஸமானத்வ ஸ்வதேசீ ஸ்பர்ஸபாவன*
*ஹீம் ஏகாதச ஸேவாவீம் நம்ரத்வே வ்ரதநிச்சயே.* 279

**—வினோபா பாவே செய்த மராத்திப் பாடல்**

அஹிம்சை, சத்தியம், திருடாமை, பிரமசரியம், பொருள் சேமியாமை, உடல் உழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சர்வமத சமானத்துவம், சுதேசி, தீண்டாமை ஒழித்தல் ஆகிய 11 விரதங்களையும் பணிவோடு உறுதியாய் கடைப்பிடிப்போம்.

## நாட்டு வாழ்த்து

*ஜனகணமன அதிநாயக ஜயஹே பாரத பாக்ய விதாதா*
*பஞ்ஜாப ஸிந்து குஜராத மராடா, த்ராவிட உத்கல வங்க*
*விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா உச்சல ஜலதி தரங்க*
*தவ ஶுப நாமே ஜாகே தவஶுப ஆசி சமாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜனகண மங்கல தாயக ஜயஹே பாரத பாக்ய விதாதா*
*ஜயஹே! ஜயஹே! ஜயஹே! ஜய ஜய ஜய ஜயஹே!* 280

**—ரவீந்திரநாத தாகுர் பாடல்**

மக்கள் மனத்தின் நாயகமே, பாரத மக்களுக்குப் பாக்கியமெல்லாம் தருவோய், வெல்க. பஞ்சாப், சிந்து, குஜராத், மராட்டிரம், திராவிடம், உத்கலம், வங்கம் ஆகிய நாடுகள் விந்தம் இமயம் ஆகிய மலைகள், யமுனை, கங்கை, அலைமோதும் பெருங்கடல்கள் உன் திருப்பெயர்கேட்டு உன் மங்கள வாழ்த்தைவேண்டி, உன் வெற்றித் திருப்புகழைப் பாடும். மக்களுக்கு மங்களம் தருவோய், பாரத மக்களுக்குப் பாக்கியமெல்லாம் தருவோய், வெல்க வெல்க வெல்க.

## பிற்சேர்க்கை

முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார்திருப்புன்கூர்
அந்த மில்லா அடிகள் அவர்போலும்
கந்தம் மல்கு கமழ்புன் சடையாரே. 281

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு
மாகடல் விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை
தன்னை வினவில்
ஏனம்இன மானினொடு கிள்ளைதினை கொள்ள
எழிலார் கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகு
காளத்தி மலையே. 282

—சம்பந்தர்

கண்ணாய் எழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில் சூழ்மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னைஎன் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்து
அணி ஆரூரானை மறக்கலும் ஆமே. 284

மறைக ளாயின நான்கும்
மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையும் தோத்திரத் திறையும்
தொன்மையும் நன்மையும் ஆய

அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. 285

அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு ஆரூர்புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 286

—சுந்தரர் தேவாரம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 287

—திருவாசகம்

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக் குள்ள எல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான்பெற்ற கோமளமே. 288

—அபிராமி அந்தாதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து. 289

—நம்பியாண்டார் நம்பி

நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுஉன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்தெம் கடவுளானே. 290

— அப்பர் தேவாரம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கடவுளைக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந் தனவே. 291

—திருவிசைப்பா

ஈசனுக் கன்பில்லார் அடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களைநாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகக் கொண்டு
கூசிமொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே. 292

—சிவஞானசித்தியார்

சிரத்தானத்திற் பணியாதே
செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொருப் பலதான
மலர்த்தாள் வைத்தெனைத் தனைஆள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
திருக் காளத்திப் . பெருமாளே. 293

—திருப்புகழ்

செம்பொன டிச்சிறு கிண்கிணியோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை அரைஞாண் அரைமணி யொடுமொளி
திகழ்அரை வடமாடப்
பைம்பொன் அசும்பிய தொந்தியொ டுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற் பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காதும் அசைந்தாடக்
கட்டிய சூழியும் முச்சியும் உச்சிக்
கதிர்முத் தொடுமாட
அம்பவ ழத்திரு மேனியும் ஆடிட
ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை. 294

—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

# ஆசிரியர் பெயர் நூற்பெயர்


அதிவீரராமபாண்டியர் : கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி 86

அப்பர் : தேவாரம் 10, 20–2, 23, 25, 37, 101

அபிராமி பட்டர் : அபிராமி அந்தாதி 100

அருணகிரிநாதர் : கந்தர் அலங்காரம் 65

கந்தர் அனுபூதி 10

திருப்புகழ் 11, 12, 17, 18, 26, 56, 102

அருணந்தி சிவாசாரியார் : சிவஞானசித்தியார் 101

ஆண்டாள் : 9, 12, 66

இளங்கோ அடிகள் : சிலப்பதிகாரம் 9, 76

கச்சியப்ப முனிவர் : கந்தபுராணம் 78

கந்தப்ப தேசிகர் : தணிகைப் பிள்ளைத்தமிழ் 81

கம்பர் : ராமாயணம் 8, 11, 13, 25, 85

தனிப்பாடல் 12

குமரகுருபர சுவாமிகள் : சகலகலாவல்லிமாலை 86

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 83

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் 82,102

குலசேகர ஆழ்வார் : பெருமாள் திருமொழி 68

கோபாலகிருஷ்ணபாரதி : நந்தனார் சரித்திரக் கீர்த்தனை 87

சம்பந்தர் : தேவாரம் 14, 22, 24, 29, 99

சுந்தரர் தேவாரம் : 25, 49, 99

சுவாமிநாத தேசிகர் : திருச்செந்திற் கலம்பகம் 87

செங்கல்வராய பிள்ளை : மஞ்ஞைப்பாட்டு 23

சேக்கிழார் : பெரியபுராணம் 85

சேந்தனார் : திருவிசைப்பா 78, 101

தாயுமானவர் 12, 73

திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி 19, 25, 70

திருமழிசையாழ்வார் : திருச்சந்த விருத்தம் 68

திருமூலர் : திருமந்திரம் 84
தேசிக விநாயகம் பிள்ளை 86
தொண்டரடிப் பொடியாழ்வார் : திருப்பள்ளியெழுச்சி 69
திருமாலை 69
நம்பியாண்டார் நம்பி : மூத்தபிள்ளையார் இரட்டைமணிமாலை 100
நம்மாழ்வார் : திருவாய்மொழி 72
பட்டினத்தார் 85
பரஞ்சோதி முனிவர் : திருவிளையாடற் புராணம் 86
பாரதியார் : கவிதை 6, 10, 11, 12, 16, 17, 18, 22, 24, 87-92
பழம்பாடல் 77
பகழிக்கூத்தர் : திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் 81
பெரியாழ்வார் : திருப்பல்லாண்டு 65
பொய்கை ஆழ்வார் 72
மாணிக்கவாசகர் : திருவாசகம் 6, 13, 17, 52, 100
மார்க்கசகாயதேவர் : திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் 82
ராமலிங்க சுவாமிகள் : அருட்பா 5, 27, 79
வேதநாயகம் பிள்ளை : கீர்த்தனை 9, 23

**மற்றவை :**

உபநிஷத் : 94, 95
தாகுர் பாடல் : 96
நாராயணமேத்தா : 95 (15)
நியூமன் பாடல் : 15
பைபிள் : 17
முஸ்லிம் பிரார்த்தனை : 93
ருக்வேதம் : 5
விநோபா பாவே : 96

# ராக தாளக் குறிப்பு

அன்பர் சிலர் விரும்பியபடி இங்கு ராக தாளக்குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. இவை வித்தியாலயப் பிள்ளைகள் பயின்றுள்ள ராகங்கள் ஆகும். பொதுவாக, அப்பர் திருக்குறுந்தொகை நாதநாமக்கிரியையிலும், திருத்தாண்டகம் ஹரிகாம்போதியிலும், திருவாசகம் மோகனத்திலும் பாடுவது சம்பிரதாயம்.

| பக்கம் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 5 | கல்லார்க்கும் | எதுகுலகாம்போதி | |
| 6 | கூறும்நாவே | மோகனம் | |
| | வெள்ளைத்தாமரை | ஆனந்த பைரவி | |
| 7 | பொழுது புலர்ந்தது | பூபாளம் | |
| 8 | உலகம் யாவையும் | பூபாளம் | |
| | சகல வல்லமை | பிலகரி | ஆதி |
| 9 | திங்களை | பூபாளம் | |
| | தூமணி மாடத்து | சாரங்கா | |
| 10 | பரிதியின் பேரொளி | பிலகரி | |
| | நாராயணுய | சஹாணு | |
| | உருவாய் அருவாய் | ,, | |
| 11 | நாழி நவை தீர் | ,, | |
| | இரவு பகல் | | |
| | நின்னெழில் விழி | பூபாளம் | |
| 12 | நீதானெத்தனையாலும் | | |
| | புள்ளினம் | பூபாளம் | |
| | கருப்பூரம் நாறுமோ | நீலாம்புரி | |
| 13 | வேதங்கள் | எதுகுல காம்போதி | |
| | வேண்டத்தக்கது | மோகனம் | |
| 14 | கற்றுங் கெரியோம்பி | குறிஞ்சி | திரிபுடை |
| 16 | எடுத்த காரியம் | தன்யாசி | |
| 17 | அன்பே பிரதானம் | நாதநாமக்கிரியை | |
| | உம்பர்தரு | கேதாரம் | ஆதி |
| | வாணுகி மண்ணுகி | அடாணு | |
| 19 | பக்தியால் | ஆபோகி | ,, |
| | பகைவனுக்கு | தோடி | ,, |
| | திருத்தாய் | பந்துவராளி | ரூபகம் |
| 20 | தலையே நீ வணங்காய் | பந்துவராளி | ரூபகம் |
| 21 | பெருகலாம் | நாதநாமக்கிரியை | |

| பக்கம் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| 22 | மண்ணில் நல்ல | நவரோஸ் | ஆதி |
| 23 | பொறுமையே | வசந்தா | ஆதி |
| | சொன்மாலை | ஆரபி | திரிபுடை |
| 23 | ஆடுமயிலே | புன்னாகவராளி | ஆதி |
| 24 | பிடியதன்உரு | நாட்டை | ஆதி |
| 26 | குலந்தரும் | சிம்மேந்திரமத்யமம் | |
| | மாதர் பிறை | நவரோஸ் | ரூபகம் |
| | எனக்கினி | நவரோஸ் | திரிபுடை |
| | தோய்ந்தும் | சஹானா | |
| | அபகார | சக்கரவாகம் | கண்டஜாதி திரிபுடை |
| 29 | தோடுடைய | நாட்டை | ரூபகம் |
| | அங்கமும் வேதமும் | ,, | ,, |
| 30 | வண்டார் குழல் | ,, | ,, |
| | உண்ணாமுலை | ,, | ,, |
| | பண்ணும் பதம் | ,, | ,, |
| | சிலைதனை | ,, | ஆதி |
| | மடையில் வாளை | காம்போதி | ரூபகம் |
| 31 | ஒடுங்கும் பிணி | ஆரபி | திரிபுடை |
| | சிறையாரும் | ,, | ,, |
| | நாராயணாய | ,, | ,, |
| | பூவார் மலர் | நவரோஸ் | |
| | தமிழின் நீர்மை | நவரோஸ் | |
| 32 | நன்றுடையானை | குறிஞ்சி | ,, |
| | செல்வமல்கு | குறிஞ்சி | ,, |
| | ஆரூடசடை | நீலாம்புரி | ,, |
| | மாதர் மடப்பிடி | அடாணா | ரூபகம் |
| 33 | நீநாளும் | நாதநாமக்கிரியை | |
| | பேயடையா | ,, | |
| | மந்திரமாவது | நவரோஸ் | ரூபகம் |
| | வேயுறுதோளி | ,, | ரூபகம் |
| | எந்தை ஈசன் | ,, | ஆதி |
| 34 | பொங்கு வெண்மணல் | ,, | ஆதி |
| | என்ன புண்ணியம் | பந்துவராளி | ரூபகம் |
| | தொண்டரஞ்சு | யதுகுலகாம்போதி | திரிபுடை |
| | ஆடினாய் நறு | கேதார கௌளம் | ஆதி |

| பக்கம் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| | இடரினும் தளரினும் | கேதார கௌளம் | ஆதி |
| 35 | சந்தமார் | நவரோஸ் | ஆதி |
| | மாணிநேர்விழி | நவரோஸ் | ரூபகம் |
| | காதலாகி | பைரவி | திஸ்ர திரிபுடை |
| | வீடலால | ,, | ரூபகம் |
| | வானைக்காவில் | ,, | ரூபகம் |
| 36 | வேதவேள்வி | சங்கராபரணம் | ஆதி |
| | உற்றுமை | சங்கராபரணம் | ,, |
| 37 | கூற்றுயின | நவரோஸ் | ,, |
| | கைப்போது | நவரோஸ் | செம்பை |
| | சொற்றுணை | கேதாரகௌளம் | திஸ்ர திரிபுடை |
| 41 | நம்கடம்பனை | நாட்டை | ஆதி |
| 42 | ஏதும் ஒன்றும் / சாத்திரம்பல | காம்போதி | ஆதி |
| | சமர சூரபன்மா | நாட்டை | ஆதி |
| 43 | மாசில் வீணையும் | நாத நாமக்கிரியை | ரூபகம் |
| | விறகில் தீயினன் | ,, | ,, |
| 49 | பித்தா பிறைசூடி | ,, | ,, |
| | சாதலும் பிறத்தலும் | காம்போதி | ,, |
| | தில்லைவாழ் | நவரோஸ் | செம்பை |
| | நீள நினைந்து | பந்துவராளி | ரூபகம் |
| | தம்மையே | நவரோஸ் | ,, |
| | பொன்னார்மேனி | பந்துவராளி | ,, |
| 51 | பண்ணிடைத் தமிழ் | ,, | ,, |
| | எங்கேனும் | ,, | ,, |
| | பெற்ற போழ்தும் | சாமா | ,, |
| | வாழ்வாவது | நாட்டை | ,, |
| 52 | ஆதியும் | பூபாளம் | |
| 53 | பண்சுமந்த | மோகனம் | |
| 54 | தினைத்தனை | அடாணா | |
| 56 | அகாமுமாகி | சிம்மேந்திரமத்யமம் | |
| 57 | அதிரும் கழல் | சரசுவதி | ஆதி |
| 58 | ஏறுமயிலேறி | சிந்து பைரவி | செம்பை |
| | ஒரு பொழுதும் | காகரப்பியா | திரிபுடை |
| 59 | கலைமேவு | சண்முகப்பிரியா | |

| பக்கம் | பாடல் | ராகம் | தாளம் |
|---|---|---|---|
| | காதின்மணி | நவரோஸ் | |
| 60 | காலனிடத்து | கல்யாணி | செம்பை |
| | கைத்தலம் நிறை | நாட்டை | |
| | சந்ததம் பந்த | ஆனந்த பைரவி | |
| 61 | திருமகள் உலாவும் | நாட்டை | |
| 62 | நீ தத்துவமாகி | கௌரி மனோகரி | ஆதி |
| 63 | நீலங்கொள் | ஆனந்த பைரவி | |
| | பாதிமதி நதி | ஆனந்த பைரவி | |
| | பிறவியலை ஆற்றினில் | பிலகரி | திரிபுடை |
| 64 | வசனமிக | மோகனம் | ஆதி |
| 65 | பல்லாண்டு | ஆனந்த பைரவி | |
| 66 | அடியோமோடும் | நாட்டை | |
| 67 | மார்கழித்திங்கள் | பிலகரி | |
| | ஓங்கி உலகளந்த | ஆரபி | |
| | மாலே மணிவண்ணா | குந்தலவராளி | |
| 68 | மன்னுபுகழ் / பாராளும் | நீலாம்புரி | |
| 69 | பச்சைமா மலைபோல் | சங்கராபரணம் | |
| | கதிரவன் குணதிசை | பூபாளம் | |
| 70 | வாடினேன் / குலந்தரும் | சிம்மேந்திர மத்யமம் | |
| | தாயே தந்தை / தெரியேன் | பந்துவராளி | |
| 76 | மருங்கு வண்டு | அடாணா | |
| 77 | வடவரையை | அடாணா | |
| 77 | பெரியவனை | தன்யாசி | |
| | ஆதியங் கடவுளை | | |
| 78 | ஆறிரு தடந்தோள் | மத்யமாவதி | |
| 79 | மாற்றறியாத | சுருட்டி | |
| 84 | அன்பு சிவம் / சிவசிவ | சிம்மேந்திரமத்யமம் | |
| 85 | உலகெலாம் | தன்யாசி | |
| 87 | வாழ்க நீ எம்மான் | கேதாரகௌளம் | |
| 88 | சொல்லவல்லாயோ | சுருட்டி | |

# பாட்டு முதற் குறிப்பு


அகரமுமாகி 56
அங்கமும் 29
அங்கிங்கெனாதபடி 73
அச்சுதன் 72
அஞ்சியாகிலும் 41
அட்டமாசித்தி 35
அடப்பண்ணி 84
அடிமைவாழ்வு 87
அடியோமோடும் 66
அத்தேவர் 54
அதிருங்கழல் 57
அதுபழச்சுவை 24
அந்தியும் 100
அப்பன் நீ 46
அப்பா நான் 79
அபகார நிந்தை 26,57
அம்பலத்தரசே 27
அரிச்சுற்ற 40
அருநெறிய 29
அரும்பொனே 74
அருள்ஜோதியே 15
அறுபொருள் 77
அன்புசிவம் 84
அன்பேபிரதானம் 17
ஆக்கையால் 21
ஆட்டுத்தேவர் 56
ஆட்டுவித்தால் 47
ஆடினாய் 34
ஆடும்சிதம்பர 87
ஆடுமயிலே 23
ஆண்டகுரவன் 86
ஆத்திசூடி 22
ஆதியங் 77
ஆதியும் 52
ஆரருள் 78
ஆற்றல்கள் 5
ஆருடுசெடை 32
ஆறிருதடங் 78
ஆனைத்தோல் 76
இங்கேபோதும் 72
இசைந்தவாறும் 58
இடரினும் 34
இதுநல்ல 83
இம்மைவானவர் 41
இரவுபகல் 11
இறுமாந்து 22
இன்றெனக்கு 55
இன்னார் 72
ஈசனுக்கு 101
ஈன்றாளுமாய் 39
உடம்பெனும் 38
உண்ணாமுலை 30
உணர்வாரார் 72
உம்பர் உலகு 68
உம்பர்தரு 17
உலகம் உண்ட 73
உலகம்யாவை 8
உலகெலாம் 85
உற்றார் 21
உற்றுமை 36
ஊரிலேன் 69
ஊனில் ஆவி 40
எங்கேனும் 51
எடுத்த காரியம் 16
எண்ணிய 24
எண்ணும் 89
எத்தனைகோடி 89
எத்தனையும் 68
எத்தனை விதங்கள் 75
எந்த மாதவம் 40
எந்தை ஈசன் 33
எவரேனும் 46
என்ன புண்ணியம் 34
என்னிலாரும் 41
எனக்கினி 25, 51
ஏதும் ஒன்றும் 42
ஏறுமயில் 58
ஐவகை 74
ஒடுங்கும் 31
ஒருபொழுதும் 58
ஒருமையுடன் 80
ஒழியாத 82
ஒளிமணி 72
ஒன்றியிருந்து 39
ஒன்றே குலமும் 85
ஓங்கி 66
ஓசை ஒலி 46
ஓம்சக்தி 17
ஓயாதே 53
கங்கையாடில் 44
கங்கையில் 69
கண்காணி 85
கண்காள் 20
கண்ணாய் 99
கண்ணால் 82
கதிரவன் 69
கருப்பூரம் 12
கருவாய் 40
கருவினாரு 58

| | |
|---|---|
| கருவுற்ற | 40 |
| கரையாய் | 20, 71 |
| கல்லாப்பிழை | 85 |
| கல்லார்க்கும் | 5 |
| கல்விஞான | 10, 79 |
| கலைமேவு | 59 |
| கற்றவர் | 101 |
| கற்றுங்கெரி | 15 |
| கற்றுக்கொள்வன | 44 |
| கனகசபா | 100 |
| கனியினும் | 41 |
| காதலாகி | 35 |
| காதார்குழை | 53 |
| காதின்மணி | 59 |
| காமற்கென் | 71 |
| காமனை | 78 |
| காயமே | 39 |
| காரூர் புனல் | 49 |
| கால்களால் | 21 |
| காலனிடத்து | 66 |
| குலந்தரும் | 25, 70 |
| குற்றம் நீ | 35 |
| குறிகளும் | 43 |
| குறைவிலா | 55 |
| குனித்த புருவமும் | 39 |
| கூடாரை | 67 |
| கூவாய் | 20, 71 |
| கூற்றாயின | 37 |
| கூறும்நாவே | 6 |
| கைகாள் | 21 |
| கைத்தலநிறை | 60 |
| கைப்போது | 38 |
| கோங்கணை | 25, 51 |
| கொட்டாய் | 20, 71 |
| கோலும் புல்லும் | 42 |
| கோழி | 72 |
| சகமலாது | 38 |
| சகலவல்லமை | 8 |
| சங்கநிதி | 48 |
| சங்கமும் | 77 |
| சங்கரசிவா | 28 |
| சந்ததம் | 60 |
| சந்தமார் | 35 |
| சம்போசங்கர | 27 |
| சமரசூர | 42 |
| சரணகமல | 61 |
| சலம்பூவொடு | 37 |
| சாத்திரம் | 42 |
| சாதலும் | 49 |
| சாதியிலே | 79 |
| சிந்திப்பரியன | 39 |
| சிரத்தானத்தில் | 102 |
| சிலைதனை | 30 |
| சிவசிவ | 84 |
| சிவலோக | 87 |
| சிவன் எனும் | 40 |
| சிறையாரும் | 3 |
| சூடகம்தோள் | 54 |
| சேடியாய | 68 |
| செம்பொனடி | 102 |
| செல்வநெடு | 14 |
| செல்வம்மல்கிய | 32 |
| செவிகாள் | 20 |
| சேந்தனை | 65 |
| சொல்லவல் | 88 |
| சொல்லாய் | 20, 71 |
| சொல்லுவோம் | 15 |
| சொற்றுணை | 38 |
| சொன்மாலை | 23, 38 |
| ஞாயிறு | 9 |
| தடுங்கோள் | 64 |
| தண்டாயுதமும் | 65 |
| தந்ததுன் | 56 |
| தம்மையே | 50 |
| தமிழின் | 31 |
| தலையே | 20 |
| தன்னுயிர் | 87 |
| தன்னுளே | 68 |
| தாய்தன்னை | 13 |
| தாயத்தார் | 10, 79 |
| தாயின்மணிக் | 92 |
| தாயேதந்தை | 70 |
| திங்களை | 9 |
| திருக்கோயில் | 47 |
| திருத்தாய் | 19, 71 |
| திருநாமம் | 47 |
| திருமகள் | 61 |
| தில்லைவாழ் | 49 |
| தினைத்தனை | 54 |
| துள்ளுமறி | 76 |
| தூண்டுசுடர் | 45 |
| தூமணி | 9, 67 |
| தேரியேன் | 70 |
| தெருண்ட | 51 |
| தேவர்கோ | 52 |
| தோடுக்கும் | 83 |
| தொண்டரஞ்சு | 34 |
| தொண்டீர் | 72 |
| தொண்டுபொடி | 41 |
| தொழுது | 41 |
| தோடுடைய | 29 |
| தோய்ந்தும் | 25 |
| நடராஜா | 28 |
| நண்ணுதார் | 72 |
| நன்றே | 100 |

நம்கடம்பனை 41
நமக்குத் தொழில் 88
நமச்சிவாய 43
நற்பதத்தார் 101
நன்றுடையானை 32
நன்றுநாள் 42
நாடிப்புலங்கள் 86
நாதவிந்து 62
நாமார்க்கும் 48
நாராயண 28
நாராயணாயை 10
நாழிநவைதீர் 11
நாள்என் 65
நாளாய 31
நிலைபெறுமாறு 45
நின்னுவார் 47
நின்னெழில் 11
நின்னைச்சரண் 90
நீதத்துவமாகி 62
நீதானெத்தனை 12
நீநாளும் 33
நீலங்கொள் 63
நீளநினைந்து 49
நீறுகோல்தேர் 32
நெக்கு நெக்கு 43
நெஞ்சே 21
பக்தியால் 19
பகைவனுக்கு 19
பச்சைமா 69
படைக்கலமாக 39
பண்சுமந்த 53
பண்ணிடை 51
பண்ணும்பதம் 30
பண்ணும்பாத 86
பண்ணேன் 12
பரிதியின் 10
பரிந்த 78
பல்லாண்டு 65
பற்றிநின்ற 45
பன்னலம் 37
பஜகோவிந்தம் 23
பாதிமதிநதி 63
பாரத சமுதாயம் 92
பாராளும் 68
பாரொடு 56
பால்நினை 100
பிடியதன் 24
பித்தா 49
பிறிவியலை 63
புல்நுனைப்பணி 50
புவனியில் 55
புழுவாய் 40
புள்ளினம் 12
புன்னெறி 78
பூதங்கள்அல்ல 86
பூவர்சோலை 76
பூவார்மலர் 31
பெரியவனை 77
பெருகலாம் 22
பெருந்தேன் 83
பெரும்பைம்புனத் 64
பெற்றதாய் 80
பெற்றபோழ்தும் 51
பேயிடையா 33
பேராதரிக்கும் 81
போங்குபல 79
பொங்குவெண் 34
பொலிக பொலிக 73
பொழுதுபுலர் 7
பொறுமையே 23
பொன்னார்மேனி 50
பொன்னும் 99
போற்றி யருளுக 57
மங்கையர்க்கரசி 36
மடந்தாழ 77
மடையில் 30
மண்ணில் நல்ல 22
மணத்துக்கு 64
மத்தளம் 68
மந்திரமாவது 33
மருங்குவண்டு 75
மலையேவந்து 87
மற்றுப்பற்று 50
மறைகள் 99
மன்னுபுகல் 68
மனத்தகத்தான் 44
மனமெனும் 38
மனிதர்காள் 44
மாசில்வீணை 43
மாதர்ப்பிறை 25
மாதர்மடப்பிடி 33
மாமழை 9
மார்கழித்திங்கள் 66
மாலேமணி 67
மாற்றறியாத 79
மானவாழ்க்கை 34
மானினேர் 35
முடிகொண்ட 39
முந்திநின்ற 99
முருக்கிலங்கு 70
முருகா 7
மூக்கே 21
மூரிமுழங்கு 45
மூலமும் 85
மைப்படிந்த 48

| | | | | |
|---|---|---|---|---|
| மையாடிய | 30 | வாடினேன் | 70 | விநா |
| மொய்தார் | 65 | வாயானை | 44 | விரிவிலா |
| யமுனாதீர | 28 | வாயே | 21 | விழிக்குத்துணை |
| யானும்தானாய் | 73 | வாழ்க அந்தணர் | 36 | விறகில் தீ |
| ரகுபதி | 27 | வாழ்க நீ | 87 | வீடலால |
| ராஜாராம | 28 | வாழ்த்துவாயும் | 43 | வெள்ளைத்த |
| வசனமிக | 64 | வாழ்த்துவதும் | 52 | வேண்டத்தக் |
| வடவரையை | 77 | வாழ்வாவது | 51 | வேதங்கள் |
| வண்டார்குழல் | 30 | வாழியசெந்தமிழ் | 91 | வேதநூல் |
| வந்தித்திடுவோம் | 81 | வானவர்கள் | 99 | வேதவேள்வி |
| வந்தேமாதரம் | 91 | வானாகி | 17 | வேயுறு |
| வரங்கொண்ட | 87 | வானைக்காவில் | 36 | வையத்து |
| வருவாய் | 89 | விண்ணகத் | 54 | ஸ்ரீகணேச |


16819
031:1x
ERSITY EXTENSIO
DEC 19